# செங்கோட்டை நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2024ம் ஆண்டு தை 25ம் நாள் 08-02-2024 வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற இருக்கின்றது. எனவே துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் வருகை தரும் படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(10.11.2023 மற்றும் 16.11.2023 அன்று ஒத்தி வைக்கப்பட்ட மன்றப் பொருட்கள்)

**மன்றப்பொருள் : 01**

அரசாணை (நி) எண்:168, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 16.11.2015-ன்படி செங்கோட்டை நகராட்சியில் பொது சுகாதார நிரந்தர தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்கள் 2023-2024ம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| பொது சுகாதார பிரிவு தூய்மை பணியாளர்கள் | ஆண்கள் 11 பேர் |
| பொது சுகாதார பிரிவு தூய்மை பணியாளர்கள் | பெண்கள் 2 பேர் |
| தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் | ஆண்கள் 3 பேர் |
| ஓட்டுநர்கள் | ஆண்கள் 3 பேர் |
| அலுவலக உதவியாளர் | பெண் 1 நபர் |
| அலுவலக உதவியாளர் | ஆண் 1 நபர் |
| குடிநீர் பிரிவு பணியாளர்கள் | ஆண்கள் 3 பேர் |
| இரவு காவலர் | ஆண் 1 நபர் |
| **மொத்தம் நபர்கள்** | **25 பேர்** |

மேற்கண்ட சீருடைகள் கோ-ஆப் டெக்ஸ், திருநெல்வேலி மூலம் கொள்முதல் செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.65000/- தையற்கூலி ரூ.25000/- ஆக மொத்தம் ரூ.90,000/- உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்:2291/2011/எச்1)

அலுவலக குறிப்பு

1. சீருடைகள் திருநெல்வேலி கோ ஆப்-டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்திட அனுமதி வழங்கலாம்.
2. செலவினம் ரூ.90,000/- வருவாய் மற்றும் மூலதன நிதி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:02**

மன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் சீருடைகள் வழங்க வேண்டும் என தீர்மானித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 02**

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 24 வார்டுகளில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் பகிர்மான குழாய், Pumping Main ஆகியவற்றில் ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யவும், வால்வு தொட்டியில் Sluice Value-களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் 2023-2024 ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:875/2023/E1)

அலுவலக குறிப்பு :

1) பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:03**

வார்டு 1, வார்டு 8, வார்டு 20, வார்டு 24, வார்டு 3, வார்டு 21, வார்டு 22, வார்டு 17, வார்டு 13, வார்டு 24, வார்டு 19, வார்டு 14, வார்டு 5.

வார்டுகள் 1,3,4,5,13,19,17,21,22,24,20,12,14 நகர்மன்ற துணை தலைவர் உட்பட 13 மன்ற உறுப்பினர்கள் வழங்கியுள்ள கடிதத்தில் என்ன பழுதுகள் என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை எனவும், குடிநீர் குழாய் உடைப்பு பழுதுகள் பற்றி தனித்தனியாக அறியவில்லை என்பதாலும், 3 பொருள் ரத்து செய்து விலை விபரங்களுடன் அடுத்த மன்ற கூட்டத்தில் விரிவாக பொருள் வைக்க வேண்டும் என ஆட்சேபனை தெரிவித்துள்ளதுடன் குடிநீர் அத்தியாவசியம் என்பதால் அனுமதிக்கலாம் என மன்ற உறுப்பினர்களிடம் பொறியாளரால் விளக்கம் அளிக்கப்பட்டும் அ.இ.அ.தி.மு.க நகர்மன்ற உறுப்பினர்கள் அதனை ஏற்க மறுத்தனர். எனவே பொது மக்களின் நலன் கருத்திற் கொண்டு அனுமதியின் பேரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் : 03**

செங்கோட்டை நகராட்சி ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் நெடுஞ்சாலை துறையினரால் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பகுதி வழியாக வார்டு எண் 1 மற்றும் வார்டு எண் 2ல் உள்ள காவாங்கரை பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் சேதப்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட குழாய் உடைப்புகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:864/2023/E1)

அலுவலக குறிப்பு :

1) பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:04**

குடிநீர் குழாய் சேதம் அடைந்தது நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து செலவினத்தினை வசூல் செய்ய வேண்டும் என அ.தி.மு.க, பா.ஜ.க மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனுக்களை ஆட்சேபனை தெரிவித்தனர். வார்டு 1, 2 குடிநீர் கொடுக்கப்பட்டு 60 நாட்கள் ஆகின்ற காரணத்தினால் பொறியாளர் அவர்களால் விளக்கம் வழங்கியும் ஏற்க மறுத்தனர். எனவே மக்கள் நலன் கருதி குடிநீர் பிரச்சனை தீர்க்கவும் குடிநீர் அவசரம் அவசியம் கருதியும் அனுமதி வழங்கப்படுகிறது.

**மன்றப்பொருள் : 04**

செங்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் சிறுமின் விசை மோட்டார் பம்புகள் (Sintax Tank), கம்பரசர் மோட்டார், திறந்த வெளி கிணறு மோட்டார்கள் மற்றும் MCC மையத்தில் அமைந்துள்ள மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்பட்டும் பழுதுகளை நீக்கம் செய்து இயக்க 2023-2024 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.5,00,000/- க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:876/2023/E1)

அலுவலக குறிப்பு :

1) பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மாணம் எண்:05**

அ.இ.தி.மு.க 10 நகர்மன்ற உறுப்பினர்கள், பாஜக 3 நகர்மன்ற உறுப்பினர்களும் அளித்துள்ள ஆட்சேபனை கடிதத்தில் 1 முதல் 24 வரையிலுள்ள சிறு மின் விசை மோட்டார் பம்பு ஏற்படும் பழுதுகள் எது எனவும் M.C.C மைய மோட்டார் பழுது என்ன எனவும் விபரம் ஏதும் குறிப்பிடப்படாமல் வைக்கப்பட்டிருப்பதால் பொருள் எண்ணை ரத்து செய்ய வேண்டும் அடுத்த கூட்டத்தில் விபரங்களுடன் பொருள் வைக்க வேண்டும் என ஆட்சேபனை தெரிவித்தனர். குடிநீர் அத்தியாசத்தினை கருதி அனுமதி வழங்கி தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் : 05**

செங்கோட்டை நகராட்சியில் அனைத்து கோப்பு நடவடிக்கைகளும் UTIS மூலம் கணினி வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அரசாணை நிலை எண்:10/23.01.2023-ன்படி உதவியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதாலும், தற்போது பயன்பாட்டில் உள்ள கணினிகள் அடிக்கடி பழுதடைந்து வருவதாலும் இவ்வலுவலக பயன்பாட்டிற்கு என மூன்று புதிய கணினிகள் மற்றும் பிரிண்டர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,30,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்:701/2021/E1)

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மாணம் எண்:06**

கணிணிகள்,பிரிண்டர் வாங்கிட ஒப்பந்தப்புள்ளி கோரிய விபரங்கள் இல்லை எனவும் விபரங்கள் அளித்திடவும் ரத்து செய்திட அ.இ.அ.தி.மு.க. பாஜக 14 நகர் மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்க அரசு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 06**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் கடந்த காலங்களில் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. அத்துடன் பொதுமக்கள், குழந்தைகள், பாதசாரிகள், வாகனங்களில் மக்கள் செல்லும்போது மிகுந்த அச்சத்துடன் செல்வதால் தெரு நாய்களை அப்புறப்படுத்தும்படி 19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் 31.10.2023 அன்று கடிதம் வழங்கியுள்ளார்.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்:4337/2023/அ4, நாள்:30.10.2023-ல் நகராட்சி பகுதியில் நாய் இணங்களில் தொல்லைகள் அதிகளவில் உள்ளதால் அதனால் மக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் தொடர்பாக நாய்களுக்கு உரிய கருத்தடை ஊசி பணிகளை மேற்கொள்ளவும், நகராட்சிகளின் அறுவை சிகிச்சை கூடத்தில் இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ அமைப்புகள் மூலமாக இப்பணிகளை மேற்கொண்டு உரிய உத்திரவுகள் அளிக்க வேண்டும் எனவும் உரிய அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

எனவே இந்நகராட்சி பகுதியில் சுற்று திரியும் நாய்களை கணக்கெடுத்தில் 120 நாய்கள் உள்ளதனை தன்னார்வ அமைப்பு மூலம் பிடித்து கருத்தடை மேற்கொள்ளவும் அதற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணம் நாய் ஒன்றுக்கு ரூ.1650/- வீதம் 120 நாய்களுக்கு மொத்த செலவினம் ரூ.198000/-க்கு நகராட்சி அறுவை சிகிச்சை

கூடத்தில் உரிய விதிமுறைகளின்படி கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு இனப்பெருக்கத்தினை கட்டுபடுத்தவும், அதற்கான செலவினத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்திய விலங்குகள் நல வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக நகர்ப்புறத்தில் உள்ள தெரு நாய்களை பிடித்து இனப்பெருக்க அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை ரூ.198000/- வருவாய் மற்றும் மூலதன நிதி மூலம் செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்:1113/2022/எச்1)

**தீர்மானம் எண்:07**

அ.இ.அ.தி.மு.க, பாஜக நகர் மன்ற உறுப்பினர்கள் 14 பேரும் இதனால் என்ன பயன் எனவே தேவை இல்லை எனவும் அதனால் மன்ற பொருள் நிறுத்தி வைக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 07**

செங்கோட்டை நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான பைரித்ரம் (முதிர் கொசுக்களை ஒழிப்பதற்கு) மற்றும் டெமிபாஸ் (அபேட்) (கொசு புழுக்களை அழிப்பதற்கு) போதிய அளவு இருப்பு இல்லாததாலும், புவாங்கி வழங்கிட மற்றும் அதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பைரித்ரம் | - | 60 லிட்டர் |
| 2) | டெமிபாஸ் (அபேட்) | - | 40 லிட்டர் |

(ந.க.எண்: 537/2023/எச்1)

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:08**

அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் 08**

செங்கோட்டை நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான, கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதிதாக வாங்கி வழங்கிட மற்றும் அதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/- வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1) Pulse Fog Machine – | 1 எண்ணம் |
| 2) Hand Fog Machine – | 2 எண்ணம் |

(ந.க.எண்:903/2023/எச்1)

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:09**

ஏற்கனவே வாங்கிய கொசு இயந்திரம் எப்போது வாங்கப்பட்டது என்ற விபரம் இல்லை எனவே பொருளை ரத்து செய்ய வேண்டும் என அ.இ.அ.தி.மு.க (10) பஜக (4) 14 நகர்மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை வழங்கியுள்ளனர். பொது சுகாதார நலன் கருதி அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 09**

செங்கோட்டை நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு 2023-2024 ஆண்டில் தளவாட சாமான்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்கி கீழ்கண்ட விபரப்படி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்)

| | | |
|---|---|---|
| 1 | கையுறை (Nitrile) | 50 எண்ணம் |
| 2 | முகவுறை (Mask) | 50 எண்ணம் |
| 3 | ஒளிரும் சட்டை (Reflector Jacket) | 15 எண்ணம் |
| 4 | மழைகவசம் (Rain Coat) | 15 எண்ணம் |
| 5 | மண்வெட்டி (பெரியது) | 10 எண்ணம் |
| 6 | நீள மண்வெட்டி | 5 எண்ணம் |
| 7 | நீள முள்கரண்டி | 5 எண்ணம் |
| 8 | சிறிய முள்கரண்டி | 10 எண்ணம் |
| 9 | குப்பை அள்ளும் டப்பா | 15 எண்ணம் |
| 10 | வெள்ளை பினாயில் | 50 லிட்டர் |
| 11 | கருப்பு பினாயில் | 50 லிட்டர் |
| 12 | Toilet Cleaning Acid | 100 லிட்டர் |

(ந.க.எண்:908/2023/எச்1)

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:10**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 10**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வரும் TN 76 AM 3422 மற்றும் TN 76 AM 3463 வாகனங்களுக்கு பேட்டரி மாற்றும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்240 நாள்:24.07.2023ம் தேதியில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு 10.10.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் | | |
|---|---|---|---|---|
| | | ஒரு பேட்டரியின் விலை | | |
| 1 | செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள LCV வாகனங்களுக்கு இரண்டு பேட்டரி | ஐயப்பன் ஆட்டோ எலக்ட்ரீக்கல்ஸ், செங்கோட்டை | ராக்மேன், சர்தார் பேட்டரி கேர், பிரானூர், பார்டர் | ஸ்ரீவிநாயகா, ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பிரானூர், பார்டர், செங்கோட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாங்கி பொருத்தும் பணி | ரூ.4400/- | ரூ.4500/- | ரூ.4450/- |

அலுவலக குறிப்பு :

1) மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஐயப்பன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், செங்கோட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்/

**தீர்மானம் எண்:11**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 11**

செங்கோட்டை நகராட்சி FSTP-க்கு 2023-2025ம் ஆண்டிற்கு Renewal Consent order வழங்க ரூ.43,600/- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம், திருநெல்வேலி Lr No.F.TNV 1794/RS/DEE/TNPCB/TNV/2023, நாள்:21.9.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.43,600/-ஐ மாசுக்கட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்தவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண்:563/2018/இ1)

அலுவலக குறிப்பு :

1) ரூ.43,600/-செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:12**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றபொருள் : 12**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள கழிப்பறை செப்டிக் டேங்க் சுத்திகரிக்க வேண்டிய நிலையில் இருந்த காரணத்தினாலும் நகராட்சி அலுவலகத்தில் இரண்டு நச்சுத் தொட்டிகள் மற்றும் தாலுகா அலுவலகம் அருகில் உள்ள கழிப்பிடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு சுத்தம் செய்யும் பணியுடன் சேர்த்து பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.12,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.563/2013/எச்1)

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:13**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 13**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2023 வரை பெறப்பட்ட தினசரி நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமலர் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களுக்கு கட்டணம் ரூ.12,500/- நியூஸ் பேப்பர் ஏஜெண்ட், திரு.செல்வக்குமார், செங்கோட்டை என்பவருக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.902/2017/டி2)

அலுவலக குறிப்பு

1. ரூ.12500/- வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:14**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 14**

**9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ.மேரி அவர்கள் முன் மொழியும் தீர்மானம்**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.9 பம்புஹவுஸ் ரோட்டில் உள்ள சமுதாய கழிப்பிடத்தின் பராமரிப்பு மிகவும் சுகாதார கேடாக உள்ளது. கழிப்பிடத்தை தற்போது பராமரித்து வரும் சுய உதவிக்குழு லாப நோக்குடன் செயல்படுகிறது என்பதால் செயல்படாமல் உள்ள சுய உதவி குழுவினை மாற்றி ரோஜா சுய உதவிக்குழு மூலம் பராமரிப்பு பணி நடத்திட தீர்மானிக்க வேண்டி

**தீர்மானம் எண்:15**

9வது வார்டு மன்ற உறுப்பினர் முன் மொழிந்துள்ள தீர்மானத்தை மறு பரிசீலனை பண்ண மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

## கூடுதல் மன்ற பொருட்கள்

**மன்றப்பொருள்: 15**

அரசு பணியாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.310, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.10.2023 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண். 32/2023/சி1)

**தீர்மானம் எண்:16**

பதிவு செய்யப்பட்டது.

**மன்றப்பொருள்: 16**

2022-2023 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் அனுமதித்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.7 மற்றும் 8, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.05.01.2024 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண். 36/2024/சி1)

**தீர்மானம் எண்:17**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் :17**

செங்கோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள், திட்டம் சாரா பணிகள், கொள்முதல் இவைகளுக்கு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து சட்டப்பூர்வ பிடித்தங்களான வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி இவைகளை உடனுக்குடன் செலுத்துவதுடன் பட்டயக்கணக்கர் மூலம் இணையதள பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி 2023-2024 காலத்தில் வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி இணையதள பதிவு செய்யப்பட்டமைக்கு கட்டணம் Associated Accountant (P) Ltd, தென்காசி நிறுவனத்திற்கு ரூ.3,440/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்:2740/2015/பி1)

**தீர்மானம் எண்:18**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் :18**

செங்கோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள், திட்டம் சாரா பணிகள், கொள்முதல் இவைகளுக்கு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து சட்டப்பூர்வ பிடித்தங்களான வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி இவைகளை உடனுக்குடன் செலுத்துவதுடன் பட்டயக்கணக்கர் மூலம் இணையதள பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி 2023-2024 காலத்தில் வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி இணையதள பதிவு செய்யப்பட்டமைக்கு கட்டணம் Associated Accountant (P) Ltd, தென்காசி நிறுவனத்திற்கு ரூ.1,220/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2740/2015/பி1)

**தீர்மானம் எண்:19**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.19**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நகராட்சி ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் கீழ் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு (பிஎப்) தொகை 2011 முதல் 2019 வரையிலான காலத்திற்கு ரூ.16907736/- செலுத்தப்படாத காரணத்தினால் நகராட்சியின் மூலமாக மாநில பாரத வங்கி கணக்குகள் மற்றும் தி பெடரல் வங்கி கணக்கு முடக்கப்பட்டு மேற்படி தொகை ரூ. 16907736/- பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட நிலையில் நகராட்சியின் வங்கி கணக்குகள் முடக்கப்பட்டதன் காரணமாக எந்த ஒரு பட்டியலும் வழங்கப்பட முடியாத அளவிற்கு மிகுந்த தேக்கம் ஏற்பட்ட காரணத்தினால் நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் டபிள்யு பி.எம்.டி 20818/2023 வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கு நடைபெற்று மேற்படி வழக்கில் இபிஎஸ் வசூல் செய்யப்பட்ட தொகைக்கு மாண்புமிகு நீதிமன்றம் இடைக்கால தடையாணை வழங்கப்பட்டது. இதன் பின்னர் வழக்கு நடைபெற்ற நிலையில் 6.10.2023 9.10.2023 அன்று வழக்கு விசாரணைக்கு வரப்பெற்ற நிலையில் தடையாணை வழங்கப்பட்டதில் திருத்தப்பட்ட ஆணையினை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 9.10.2023 அன்று வழங்கப்பட்டுள்ளதில் பெடரல் வங்கி மூலமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.11709268-ல் ரூ.3000000/- டி.பி.சி பணியாளர்கள் மற்றும் அம்மா உணவக பணியாளர்களுக்கான தொகையினை பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகையினை விடுவிக்கும்படி திருத்திய நீதிப்பேராணை வெளியிடப்பட்டது. மேற்படி நீதிப்பேராணைக்கு தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு.கதிரவன் அவர்கள் இரு தினங்கள் (5.10.2023 மற்றும் 9.10.2023) வழக்கில் ஆஜரானார்கள். அதற்கான வழக்கறிஞர் கட்டணம் (Day Case Basis) ரூ.30000 மற்றும் உதவி வழக்கறிஞர் மற்றும் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.சாதிக்ராஜா அவர்களுக்கு ரூ.10000/- ஆக மொத்தம் ரூ.40000/- (நாற்பதாயிரம் மட்டும்) வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்:781/2012/இ1

அலுவலக குறிப்பு :

1. அரசாணை (நிலை) எண்:358 பொது (எல்.ஓ) துறை, நாள் 24.04.2017-ன்படி ரூ.40000/- வருவாய் மற்றும் மூலதன நிதி மூலமாக செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் மன்ற முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்:20**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நகராட்சி ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் கீழ் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு இ.பி.எப் தொகை 2011 முதல் 2019 வரையிலான காலத்திற்கு ரூ.16907736/- செலுத்தப்படாத காரணத்தினால் நகராட்சியின் மூலமாக மாநில பாரத வங்கி கணக்குகள் மற்றும் தி பெடரல் வங்கி கணக்கு முடக்கப்பட்டு மேற்படி தொகை ரூ.16907736/- பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட நிலையில் நகராட்சி வங்கி கணக்குகள் முடக்கப்பட்டதன் விளைவாக எந்த ஒரு பட்டியலும் வழங்கப்பட்ட முடியாத அளவிற்கு மிகுந்த தேக்கம் ஏற்பட்ட காரணத்தினால் நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் டபிள்யு பி.எம்.டி 20818/2023 வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தன. மேற்படி வழக்கில் இந்நகராட்சியின் அனைத்து கணக்குகளும் முடக்கப்பட்டு ரூ.5198468/- மாநில பாரத வங்கியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டு அவை இ.பி.எப் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கு அவர்கள் கணக்கில் இருந்து வரும் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்வது தொடர்பாக இந்நகராட்சி மூலமாக செயல்முறை ஆணை ந.க.எண்:781/2012/இ1. நாள்:16.08.2023 அன்று அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் ஆணை வழங்கப்பட்டது. இந்நிலையில் இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.சேக் உதுமான் ஹக்கீம் வழக்கு எண் டபிள்யு எம்டி எண் 23990ய2023 மற்றும் திரு. சேக் அப்துல் காதர் டபிள்யு பி.எம்.டி எண்:23991/2023 மூலமாக தங்களுக்கு 2011 முதல் 2019 வரையிலான காலத்திற்கான தொகையினை எங்களது வைப்புத் தொகையிலிருந்து பிடிக்க கூடாது என வழக்கு தொடுத்துள்ளனர். மேற்படி வழக்கில் நகராட்சி இரண்டாம் பிரதிவாதியாகவும் இ.பி.எப் துணை ஆணையர் அவர்கள் முதல் பிரிதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு வழக்கு நடைபெற்று வருகின்றது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.சாதிக்ராஜா அவர்கள் ஆஜராகி ஏற்று நடத்துவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் இரண்டு வழக்குகளுக்கு ரூ.40000/- (ரூபாய் நாற்பதாயிரம்) வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அரசாணை (நிலை) எண்:358 பொது (எல்.ஓ) துறை, நாள் 24.04.2017-ன்படி ரூ.10000/- வருவாய் மற்றும் மூலதன நிதி மூலமாக செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் மன்ற முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

   (ந.க.எண்:781/2012/இ1)

**தீர்மானம் எண்:21**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.21**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பத்து பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்:33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந 4-1) துறை, நாள்:07.06.2023 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:17404/M1/2022, நாள்:01.08.2023ன்படி மேற்படி சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1500/- மதிப்பூதியமாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பத்து பள்ளிகளில் உணவு பரிமாற பணிபுரியும் 10 நபர்களுக்கு மாதம் தலா ரூ.1500/- வீதம் மதிப்பூதியம் வழங்க 2023-2024ம் ஆண்டுக்கு செலவினம் ரூ.1,20,000/-ஐ நகராட்சி வருவாய் மற்றும் முலதன நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திட்டப்பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்:22**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 22**

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவக பணியாளர்கள் மற்றும் டெங்கு பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் EPF தொகை JJS Consultancy Service மூலம் Online-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மாதம் 1க்கு ரூ.3500/- வீதம் ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 முடிய ஓராண்டிற்கு தொகை ரூ.42000/- செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:781/2012/இ1)

**தீர்மானம் எண்:23**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 23**

தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் 1920 பிரிவு 34 நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்வி வரி வசூல் செய்வதற்கு பிரிவு 35(1)ன்படி சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5% மிகாமல் வரிவிதிப்பு செய்வதற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தம் 2022ன்படி பிரிவு 81ன்படி) சொத்து வரியுடன் நகர்மன்றங்கள் கல்வி வரியினை வரிவிதிப்பு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது சட்டப்பிரிவு 91 நகர்மன்றம் 5%க்கு மிகாமல் சொத்துவரியுடன் கல்வி வரியினை நிர்ணயம் செய்வதற்கு வழிவகை உள்ளதால் இந்நகராட்சியில் சொத்து வரியுடன் கல்வி வரியினை 5% நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். கல்வி வரியானது 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.32658/R1/2023 நாள் 27.12.2023ல் செங்கோட்டை நகராட்சி கல்வி வரியினை சொத்து வரியுடன் வசூலிப்பதற்கு நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால் 01.04.2024 முதல் சொத்து வரியுடன் கல்வி வரி நிர்ணயம் செய்து வசூலிக்க அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 73/2024/அ1)

**தீர்மானம் எண்:24**

அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் 0.50 சதவீதம் மட்டும் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 24**

செங்கோட்டை நகராட்சி வல்லம் ரோடு பகுதியில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.10.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.834/2023/இ1)

**தீர்மானம் எண்:25**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 25**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அடி பம்புகளை 2023-2024 ஆம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.1024/2023/இ1)

**தீர்மானம் எண்:26**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 26**

செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40 HP Submercible Motor Coil Short ஆகி Winding Melt ஆகி இயக்க முடியாத நிலையில் உள்ளது மேலும், அதை இயக்கக்கூடிய Starterவும் Melt ஆன நிலையில் இயக்க முடியாத நிலையில் உள்ளதால் மேற்காணும் பழுது பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். /2024/இ1)

**தீர்மானம் எண்:27**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 27**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-2024 -ன் கீழ் ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் செங்கோட்டை பேருந்து நிலையம் ward D, Block No3, Survey No 58,59,60,61 &63 ல் கடைகள் கட்டுமாணப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை அரசாணை எண் 39 நாள் 14.09.2023, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/பி1 நாள்.23.09.2023 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு KNMT மானியம் ரூ.1.44கோடி மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.1.44கோடி செலவிட தெரிவிக்கப்பட்டுள்ளதை நகர்மன்ற தீர்மான எண்.259 நாள்.05.10.2023 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டும் பணி மேற்கொள்ள | 288.00 | திரு.சேக் அப்துல் காதர் ஒப்பந்த மதிப்பை விட 0.018% அதிகம் |
| | | | திரு.எஸ்.சேக் உதுமான் ஹக்கீம் ஒப்பந்த மதிப்பை விட 0.02% குறைவு |

அகு

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.சேக் உதுமான் ஹக்கீம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்:28**

அலுவலக குறிப்பு ஏற்று அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 28**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தை புதுப்பித்த கலைஞர் நகர்புற மேம்பாட்டுதிட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் வகையில் கட்டிட விதி உறுதி தன்மை (Stability Certificate) அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி மூலம் பெறப்பட்டது அதற்கான பட்டியல் தொகை ரூ.17700/- அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.459/2023/இ1)

**தீர்மானம் எண்:29**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 29**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையம் மேம்படுத்துவதற்கான மதிப்பீடு தயார் செய்து வழங்குமாறும் 03.04.2023ல் கடிதம் வரப்பெற்றது மேற்படி செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணிக்கு DPR Consultant மூலம் தயார் செய்வதற்கு செலவு தொகை ரூ.2.88 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்ப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை பின்னேற்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:30**

அலுவலக குறிப்பை ஏற்று அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 30**

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக திட்ட மதிப்பீடு (DPR) தயார் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1. | Smart Builders | ரூ.288000/- |
| 2. | K.K. Construction | ரூ.355000/- |

அலுவலக குறிப்பு

அ) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Smart Builders நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Smart Buildersக்கு வேலை உத்தரவு வழங்கி DPR தயார் செய்யப்பட்டதையும் ஏற்றும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:31**

அலுவலக குறிப்பை ஏற்று அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 31**

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையம் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ன் கீழ் புதுப்பிக்கும் பணி ரூ.2.88 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளபடவுள்ளது மேற்படி பழைய பேருந்து நிலையம் கட்டிடத்தை இடித்து புதிய பேருந்து நிலைய கட்டிடம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது மேலும் மேற்படி பழைய பேருந்து நிலைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.74/2024/இ1)

**தீர்மானம் எண்:32**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 32**

செங்கோட்டை நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர் நச்சு தொட்டி வாகனம் ஒன்று கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9192/2022/SBM-1 நாள்.21.08.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.197/2023/அ2 நாள்.25.08.2023ன்படி நிர்வாக அனுமதியின் அடிப்படையிலும் செங்கோட்டை

நகர்மன்ற தீர்மானம் எண்.254 நாள்.05.10.2023ன்படி அனுமதி வழங்கப்பட்டு 06.10.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | |
|---|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சிக்கு 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர் நச்சு தொட்டி வாகனம் ஒன்று கொள்முதல் செய்ய | 43.25 | திரு.இன்னாச்சி முத்து. | தன்ஷிக் இன்பிரா டிரேடர்ஸ் |
| | | | 8.67 % கூடுதல் | 0.0002% குறைவு |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.0002% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thakshi Infra, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:33**

அலுவலக குறிப்பை அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 33**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 காலாங்கரையில் நவீன எரிவாயு தகன மேடை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.145.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்து பொது மக்கள் பயன்பாட்டுக்கு தயாராக உள்ளது மேற்கண்ட மின் மயானத்தில் இறுதி சடங்கில் கலந்து கொள்ள வரும் மக்கள் நிற்பதற்கு நிழற்கூடம் AC Sheet அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அரசின் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:34**

மதிப்பீடு தயார் செய்து சரியான செலவினம் குறிப்பிட வேண்டும் உத்தேச செலவினம் என குறிப்பிட்டதை ரத்து செய்ய வேண்டும் என அ.இ.அ.தி.மு.க, ப.ஜ.க 14 நகர்மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே பின்னர் முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 34**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 மற்றும் 2 காலாங்கரை ரயில்வே ஸ்டேஷன் முதல் வாஞ்சிநாதன் சிலை வரையிலான பிரதான குடிநீர் குழாய் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருகிறது எனவே, மேற்படி பிரதான குழாயை புதியதாக மாற்றி அமைக்க உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொது மக்கள் நலன் கருதி சீரான குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:35**

ரயில்வே ஸ்டேஷன் ரோடு முதல் வாஞ்சிநாதன் சிலை வரை மாற்றிட அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 35**

அரசாணை (நிலை) எண்.760 நாள்.14.12.2023ன்படி பல்வேறு துறைகளில் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்யும் வகையில் " மக்களுடன் முதல்வர்" என்ற திட்டத்தில் சிறப்பு முகாம்கள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்திடவும் மேற்படி சிறப்பு முகாம்கள் நடத்த இணைய சேவை, அடிப்படை வசதிகள், தளவாடங்கள், எழுது பொருட்கள் உட்பட அனைத்தும் உள்ளாட்சி அமைப்புகள் நிதியில் செயல்டுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு

அரசின் கொள்கை தொடர்பான திட்டம் என்பதால் மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.359/2023/இ1)

**தீர்மானம் எண்:36**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 36**

செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் அருகில் வளர்ந்துள்ள செடிகள் மற்றும் முள்மரம் அகற்றுதல் மற்றும் Filter bed சுத்தம் செய்தல் பணிக்கு 29.09.2023 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 29.09.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | திரு.இசக்கி, வல்லம் | திரு.அசன்கனி செங்கோட்டை |
|---|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் அருகில் வளர்ந்துள்ள செடிகள் மற்றும் முள்மரம் அகற்றுதல் மற்றும் Filter bed சுத்தம் செய்தல் பணிக்கு | 2.25 | 0.02% குறைவு | 4.99% அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மன்றத் தலைவர் அவர்களது முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.இசக்கி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
3. ரூ.2.25 மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்:37**

அ.இ.அ.தி.மு.க, பஜக உட்பட 14 நகர்மன்ற உறுப்பினர்கள் வழங்கியுள்ள ஆட்சேபனையில் விலைபரம் செய்யப்பட்ட விபரம் தெரிவிக்கப்படாத காரணத்தினால் இப்பொருளை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தனர். பின்னர் மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஒருமித்து அனுமதி வழங்கினர். எனவே அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் : 37**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN 76 P 8356 வாகனத்தின் தகுதி சான்று 22.12.2023 அன்று முடிவடைவதால் கீழ்காணும் பழுது பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,10,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பழுது பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கிளட்ச் பிளேட் மாற்றுதல் |
| 2. | கியர் பாக்ஸ் பழுது பணிகள் மேற்கொள்ள |
| 3. | செல்ப் மோட்டார் சர்வீஸ் |
| 4. | நான்கு வீல் கிரில் பேக் |
| 5. | எலக்ட்ரீக்கல் செக்கப் |
| 6. | டோர்லாக் புதியது மாற்ற |
| 7. | பெயிண்டிங் அடித்து எழுத்துகள் எழுத |
| 8. | டிங்கர் ஓர்க்ஸ் |
| 9. | அனைத்து ஆயில் கியர் ஓர்க்ஸ், இஞ்சின் ஆயில், டிங்கர் ஆயில், பவர் ஸ்டிரிங் ஆயில் மாற்ற |
| 10. | நான்கு வீல் பிரேக் செக்கப் |
| 11. | வாட்டர் சர்வீஸ் |
| 12. | சீட் புதியது மாற்ற |

( ந.க.எண்:1065/2023/எச்1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:38**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 38**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வாரச் சந்தை மற்றும் தினசரி சந்தை ஆகிய இடங்களில் புதிதாக கடைகள் மற்றும் வாரசந்தை கடைகள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. எனவே புதியதாக கட்டி உள்ள கடைகளுக்கும் வாரச்சந்தைக்கும் சந்தை மதிப்பு மற்றும் அரசு மதிப்பு ஆகியவற்றில் உயர்ந்த தொகையினை ஆண்டு குத்தகை இனத்தில் ஒரு வருட தொகையும், கடைகளுக்கு மூன்று வருட தொகையினை வைப்பு தொகையாக கணக்கிட்டு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும். மேலும்

| வ. எண் | குத்தகை இனம் | காலம் | கட்டிடத்தின் அளவு | சந்தை மதிப்பு வாடகை ரூ. | அரசு மதிப்பு வாடகை ரூ. | உயர்ந்த தொகை ஒரு கடைக்கு நிர்ணயம் செய்யப்படும் ஒரு வருட வாடகை தொகை | வைப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வாரச்சந்தை உரிமம் | ஒப்படைக்கப்படும் நாள் முதல் | 10x8 | 1200 | 1300 | 15600x93= 1450800+ | 2102800 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மற்றும் வாரச்சந்தை (உள்புற கடைகள் 93) | ஓராண்டுக்கு | | | | 652000<br>2102800 | |
| 2. | வாரச்சந்தை (வெளிப்புற கடைகள்12) | ஒப்படைக்கப்படும் நாள்முதல் மூன்றாண்டுகள் | 10x10 | 3600 | 3700 | 44400 | 200000 |
| 3. | தினசரி சந்தை(உள்புற கடைகள்19) | ஒப்படைக்கப்படும் நாள்முதல் மூன்றாண்டுகள் | 10x10 | 3400 | 3500 | 42000 | 200000 |
| 4. | தினசரி சந்தை கடைகள் (வெளிப்புற கடைகள் 2) | ஒப்படைக்கப்படும் நாள்முதல் மூன்றாண்டுகள் | 44x22 | 14752 | 15744 | 188928 | 700000 |

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5377/2002/P3, நாள்.02.09.2006 வழங்கப்பட்டுள்ள அறிவுரையின்படி பணி முடிவடைவதற்கு முன்னரே பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே நடைமுறையில் உள்ள பொது ஏல நிபந்தனைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும், மேலும் நாளிதழ் மூலம் விளம்பரம் செய்திடவும், அதற்குண்டான செலவின தொகைக்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வாரச் சந்தை மற்றும் தினசரி சந்தை ஆகிய இடங்களில் புதிதாக கடைகள் மற்றும் வாரசந்தை கடைகள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. எனவே புதியதாக கட்டி உள்ள கடைகளுக்கும் வாரச்சந்தைக்கும் சந்தை மதிப்பு மற்றும் அரசு மதிப்பு ஆகியவற்றில் உயர்ந்த தொகையினை ஆண்டு குத்தகை இனத்தில் ஒரு வருட தொகைக்கும், கடைகளுக்கு மூன்று வருட தொகையினை வைப்பு தொகையாக கணக்கிட்டு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:39**

மன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. தினசரி சந்தை வெளிப்புற கடை 2 எண்ணும், 44x22 அளவுகளில் பெரிதாக உள்ளன. இரண்டு கடைகளை 4 கடைகளாக மாற்ற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. வைப்புத் தொகை அதிகமாக உள்ளபடியால் வ எண் 2,3,4 இனங்கட்கு ரூ(100000) 1 லட்சம் வைப்புத் தொகையும், குறைந்தபட்ச வாடகை ரூ.3000 எனவும் நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. உள்ளூர் நபர்கட்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 39**

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவக மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வரும் குடிநீரின் அளவினை கணக்கீடு செய்யும் அளவு மானி பொருத்தும் பணிக்கு 09.05.2023 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று 17.05.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் | | |
|---|---|---|---|---|
| 1. | அம்மா உணவக | திரு.அசன் கனி, | திரு.செய்யது | திரு.முகம்மது |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேல்நிலை நீர்தேக்க தொட்டிகக்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வரும் குடிநீரின் அளவினை கணக்கீடு செய்யும் அளவுமானி பொருத்தும் பணி | செங்கோட்டை ரூ. | அலி பாதுஷா, மீனாட்சிபுரம் | மீரான், செங்கோட்டை |
| | | ரூ.25000/- | ரூ.26000/- | ரூ.28000/- |

அலுவலக குறிப்பு
மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.அசன் கனி என்பவரின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:40**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 40**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 காளியம்மன் கோவில் அருகில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டாரை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.16000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவு தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்:41**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 41**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 காளியம்மன் கோவில் அருகில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்படும் மின்மோட்டார் பழுதினை சரி செய்யும் பணிக்கு 10.01.2024 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | பணியின் பெயர் | வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் | | |
|---|---|---|---|---|
| | | திரு.P.இசக்கி | திரு.M.சேர்மன் | N.பழனிக்குமார் |
| 1. | செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 காளியம்மன் கோவில் அருகில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்படும் மின்மோட்டார் பழுதினை சரி செய்யும் பணிக்கு | ரூ.15700/- | ரூ.16900/- | ரூ.16800/- |

அலுவலக குறிப்பு

1. மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.P.இசக்கி என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1024/2023/இ1)

**தீர்மானம் எண்:42**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 42**

திருமதி ரா.ராமலெட்சுமி, நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்மொழியும் தீர்மானம்.

செங்கோட்டை நகராட்சி பகுதியானது தொழிற்வளம் ஏதும் அற்ற ஒரு சிறிய நகரமாகவே உள்ளது. நகராட்சியின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த பரப்பின் வளர்ச்சியினை வைத்தே தீர்மானிக்கப்படவேண்டியதாகின்றது. அதற்கு ஏற்ப இந்நகராட்சியானது பரப்பில் 2.68 சதுர கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. ஆகவே பொருளாதார வளர்ச்சியோ நகர வளர்ச்சியோ அற்ற நகரமாக இருந்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் நகராட்சியின் வருவாயினை அதிகரித்திடவும் நகராட்சியின் வருவாயில் தன்னிறைவு அடைவதற்காகவும், மாண்புமிகு நகராட்சி நிருவாக துறை அமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்நகராட்சியின் வாரசந்தை மற்றும் பம்புஹவுஸ் சாலையில் உள்ள தினசரி சந்தை கடைகளை நவீன கடைகளாக கட்டப்பட்டுள்ளது.

இவ்வணிக வளாகங்களில் ஏற்கனவே குத்தகைக்கு எடுத்துள்ளவர்களின் வாழ்வாதாரத்தினை எவ்வகையிலும் பாதிப்படையாத வகையில் இந்நகராட்சியில் புதிய வணிக வளாக கடைகள் கட்டப்பட்டுள்ளதில் பழைய குத்தகைதாரர்களுக்கு கடைகளை ஒதுக்கியது போக மீதமுள்ள கடைகளை பொது ஏலம் மற்றும் குத்தகை நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். அத்துடன், நகராட்சி தற்போதைய சந்தை மதிப்பு மற்றும் பொதுப்பணித்துறையின் வழிகாட்டுதல் மதிப்பு அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்புகளின் அடிப்படையில் குத்தகை தொகை விபரங்களை பழைய குத்தகைதாரர்களிடம் உரிய சம்மத கடிதங்களை பெற்றுக்கொண்டு நகராட்சி நிர்ணயம் செய்யப்படும் வாடகைக்கு அவர்கள் ஒப்புக்கொண்டால் பழைய குத்தகைதாரர்களுக்கே வணிக வளாக கடையினை வழங்கவும், இல்லை எனில் விளம்பரம் செய்து ஏலப்போட்டி நடத்தி வழங்கவும் முடிவு செய்யலாம். இதனால் ஏற்கனவே குத்தகைதாரர்களாக இருந்து வாழ்வாதாரத்தினை இழந்துள்ள அவர்களுடைய வாழ்வாதாரம் மேம்படும், நகராட்சி எதிர்நோக்கும் வருவாயும் அரசுக்கு கிடைக்கும். ஆகவே பழைய குத்தகை தாரர்களுக்கே கட்டிமுடிக்கப்பட்டுள்ள கடைகளை ஒப்படைக்க மன்றத்தின் மூலமாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி தரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்:42**

நகர்மன்ற தலைவர் கொண்டு வந்த தீர்மானத்தினை திருமதி பிரைவஷா நகர்மன்ற உறுப்பினர் வழி மொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது அனுமதியினை பெற முடிவு செய்யப்பட்டது.

**மன்றப்பொருள் : 43**

**10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பேபி ரஜப் பாத்திமா அவர்கள் முன் மொழியும் தீர்மானம்**

வார்டு எண்.9 நகர்மன்ற உறுப்பினர் திருமதி அ.மேரி அவர்கள் பம்புஹவுஸ் ரோடு கழிப்பிடம் ரோஜா மகளிர் சுய உதவிக்குழு மூலமாக நடத்தப்பட வேண்டும் என தனிப்பட்ட தீர்மானத்தினை கொண்டு வந்துள்ளார். தற்போது நடத்தி வரும் சுய உதவிக்குழு மூலம் பம்புஹவுஸ் ரோடு சுகாதார வளாகம் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது ஆனவே 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் தனித் தீர்மானத்தினை நழுவ விட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்:44**

திருமதி பேபி ரஜப் பாத்திமா 10வது வார்டு உறுப்பினர் முன் மொழிந்துள்ள தீர்மானம் 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் தீர்மானத்திற்கு எதிராக உள்ளது என்பதாலும் அந்தந்த வார்டின் பிரச்சனைகளை சம்பந்தப்பட்ட மன்ற உறுப்பினர்களுடன் கொண்டு வருவது தான் சரியானது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ரா.ராமலட்சுமி
நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகர்மன்றம்

இடம் : செங்கோட்டை